Koviloor Digital Library

உ

ஸ்ரீ பரமகுருவே நம:

மயூரகிரிப் புரான சாரமும், வெண்பா மாலையும்.



முருகப்பா, B.Com



ACC NO:- 35780

யான்

ஸ்ரீ சஷ்டிச்சுவாமிகள்

பரிமணங்குடி.

1943.

Koviloor Digital Library

Koviloor Digital Library

3-6

உ

ஸ்ரீ பரமகுருவே நம:

மயூரகிரிப் புராண சாரமும், வெண்பா மாலையும்.

★

PLMPRM.





ஆக்கியோன்

ஸ்ரீ சஷ்டிச்சுவாமிகள்
பரிமணங்குடி.

1943

Koviloor Digital Library

Koviloor Digital Library

3-6



பரிமணங்குடி ஸ்ரீ சஷ்டிச் சுவாமிகள்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

நூன்முகம்

ஆவுடையார் கோவிலின் குணபாற் பரிமணங் குடியிற் பரமகுருவருள் பெற்று வழிபடுதெய்வமாகிய மயூரகிரி ஆண்டவன் ஆக்ஞைப்படி பணிபுரிந்து குமர வேளைப்பரிவாரங்களுடனே ஸ்தாபித்து அத்தலத்திலே நந்தவனம் தடம் நாலு வீதி முதலியன உண்டாக்கி உற்சவமாதிய செய்து சொந்தப் பொருள் கந்த சுவாமிக்கேயென்று சமர்ப்பித்து மீதி நஞ்சை நிலம் ஏக்கர் ஆறு சுவாமி பூஜைக்கென்று சாஸனம் எழுதி வைத்து பூஜாதிகளும் கோவிலுரிமையும் தமது மைந்தர்பால் வழங்கி வழி வழி அடிமையாய் குருமரபு ஓங்க சுத்தசைவம், கல்வி, சுபேச்சை குணம் வாய்ந்த வாரிசு வைத்து வழங்கிடச் செய்கென வுரைத்துப் பட்டுக்கோட்டையிற் சித்தியாகி திருக்கோவில் கொண் டமரும் பரனூர் மிழலைக் கூற்றத்துக் காராளர் ஸ்ரீ முத்திராமலிங்க சுவாமிகள் மைந்தரும் ஷை தருமத்தை வழுவாது நடத்திவருபவரும், பாலப்பருவமுதற் பகவத் பூஜை பாக்கள் தொடுத்தல் பண்பு நல்லொழுக்க முடையவரும், முருகபக்தி வாய்ந்தவரும், மனைவியுந் தாமும் கந்தவேள் தொண்டுசெய்து மடாலயத்தில்

Koviloor Digital Library

வானப்பிரஸ்த நிலை மன்னியவரும், செட்டிமார் நாட்டுச் சிவநேச திருக்கூட்டப் பிரசங்கியாருமாகிய திரு. முத்துப்பிள்ளை என்கிற ஸ்ரீ சஷ்டிச் சுவாமிகளால் மயூரகிரிப் புராண சாரமும, வெண்பாமாலையும், என்ற இந்நூல் யாவரும் எளிதில் உணர்ந்து ஓதிப் பயன் பெறும் வண்ணம் நல்ல இலக்கிய நடையில் இயற்றப்பெற்று வெளிவந்திருக்கின்றது.

இப்பெரியாராகிய ஸ்ரீ சஷ்டிச் சுவாமிகளால் பல நூல்கள் இயற்றப் பெற்று வெளிவந்தவையும் வெளிவரவேண்டியவையுமாக உள்ளன 22 ஆகும். அவைகளில் வெளிவர வேண்டியதாக உள்ள நூல்களை வெளிவரச்செய்து ஆதரிப்பதானது தமிழிலக்கியத்துக்கும் கடவுள் பக்தியை உண்டாக்குவதற்கும் செய்யும் ஒரு நல்ல தொண்டு. ஆதலால் அன்பர்கள் அதற்கு வேண்டிய ஆதரவு செய்து அதனல் இம்மை மறுமை இன்பங்களை அடையுமாறு எல்லாம் வல்ல முருகன் திருவடிகளை இறைஞ்சி வேண்டிக்கொள்கிறேன்.

ராம. திருநாவுக்கரசு செட்டியார்,

காரைக்குடி.

Koviloor Digital Library

உ

மயூரகிரித்தலம் தீர்த்தம் மூர்த்தி மகிமை.

தண்மலர்ச் சோலைகளும், சாலிப்பழனங்களும், தாமரை வாவிகளும், தேனாறும் புடைசூழ, திசைகள் நான்கிலும் முறையே குங்குமக்காளி, கோட்டைக்காளி, மயிலாடுபாறைக்காளி, வீரமாகாளி, யாதியர் காவல்செய்ய சாலினிதீர்த்தம், (சாளிஊருணி) தருமசற்சீல மருதுபாண்டியனாலமைத்த மதுபுஷ்கரணி தீர்த்தம், (மருதாபுரி) மயிலினாலுண்டாக்கப்பெற்று தினம் உஷத்காலத்திற் றிருமஞ்சனமெடுத்து ஆண்டவனுக்கபிஷேகம் செய்துவருகின்ற பானயோக்கியமான மயூரபுஷ்கரணி தீர்த்தம் (தெப்பக்குளம்) கந்தமூர்த்தி வேலாயுதத்தை யூன்றிக்கொண்டு மலையின் சிறப்பைக் கண்டு நின்ற ஸ்தலத்தில் உண்டாகிய சத்திபுஷ்கரணி தீர்த்தம், (வையாபுரி) அருள் பிரவாகத்தொழுகும் ஆண்டவன் திருமுன்னர் அமைந்திருக்கின்ற சண்முக நதி தீர்த்தம், கலபம்வேண்ட கந்தனாக்கிய சரவணப் பொய்கை தீர்த்தம், கிரியின் மேற்பால் பாண்டவர் தவநிலைக்குகையும், பக்கத்தில் அவர்களால் விநாயகப்பிரதிஷ்டையும் உள்ள இடத்தில் சுனைவடிவாயமைந்த பாண்டவ தீர்த்தம், அகஸ்தியராலபிஷேகஞ் செய்யப்பெற்ற தேன் பிரவாகித்து வந்ததாலுண்டாகிய மதுநதி தீர்த்தம் (தேனாறு) ஆகிய அஷ்ட தீர்த்தங்களையும் உள்ளடக்கி,

Koviloor Digital Library

அடிவாரத்தில் பரிவாராதியர் சூழ மயூரேசர் என்னும் சுயம்புலிங்கமும் திரிபுவனமன்னவன் வரையிற் குடைந்து ஸ்தாபித்த மலைக்கொழுந்தீஸ்வரர் என்னும் பஞ்சலிங்கங்களும், அகஸ்தியர், சப்தரிஷிகள் அமர்ந்திருப்ப, மாலயனாதியர் மகரிஷிகள், மன்னர் மண்டலீகர், இருமருதுபாண்டியர், தனவணிக நகரத்தார், முதலியோர் பூஜித்து, இஷ்டசித்தி பெற்று, அவரவர்களா லியற்றிய அன்னதான மடம், தடாகம், சத்திரம், சாவடி, தண்ணீர்பந்தல், சாதுக்களிருக்கை, இருவேத பாடசாலை, ப சு ம ட ம், பவனிமண்டபங்களும் உள்ள குலகிரிதுங்கக்கிரி உயர் குன்றைக்குடி என்று அருணகிரிநாதரால் பாடப்பெற்ற, மயூரகிரித்தலத்தின்கண்ணே திருவண்ணாமலை ஆதீனம் ஐந்துகோவில் தேவஸ்தானம் சைவ சிகாமணியாகிய ஸ்வாமிகள் பரிபாலிக்க, கண்டமாணிக்கம் சிவநேசச்செல்வர் மெ. சி. பெரி. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் புதுக்கிய விமான கோபுரம் ஜெகஜோதியாய்ப் பிரகாசிக்க மாடமாளிகை நான்குவருணத்தாரிருக்கை அங்காடிலயங்கள் பொலிவுற்று விளங்க, நடு நாயகமாய் அத்தனமைத்த சித்திரமயூராசலத்தில் சூரனைவென்ற ஆறுமாமுகத்தெம்மண்ணல், மயூர வாகனராய் ஸ்ரீவல்லிகஜவல்லி சமேதராய் சஷ்டி, கார்த்திகை, தைப்பூசம், பங்குனியுத்தரம் முதலிய விசேட விழாக்கொண்டு காவடி அபிஷேகம் காணிக்கை முதலிய பிரார்த்தனைகளை யேற்று கலியுகவரதராய்க் கண்கண்ட தெய்வமாய், அடியார்க்கருள் செய்து அனவரத சாந்நிதியமுடன் வீற்றிருந்தருளுகின்றனர்.

Koviloor Digital Library

உ
சிவமயம்.
வேலும் மயிலுந் துணை.

விநாயகர்.

கந்தனுடன் மஞ்ஞைவரைக் கண்ணமருந் தோகையடித்
தந்திமுகன் முளே சரண்.

குருஸ்துதி.

பரிமணவூர் வாழும் பரமகுரு மூர்த்தி
திருவடியைச் சேர்ப்போஞ் சிரம்.

குன்றைக்குடிப் புராணசார வசனம்.

பதினெண் புராணத்திற் சைவத்து உருத்திர சங்கிதையிற் பகர்ந்ததை, பிர்மா நாரதருக்குச் சொன்னதாகச் சூதபுராணிகர் நைமிசாரண்ய வாசிகளுக்குபதேசித்தார். அதனை விற்பனர் செய்யுளாக மயூரகிரிப் புராணமென்று வெளியிட்டார். அந்தப் புராணத்தைச் சாரமாகச் சுருக்கி வசனமாக்கி அவனியிற் பரப்ப, என்னை அடிமைகொண்ட ஆறுமாமுகத் தெம தாண்டவன் செந்தமிழ்ப் பரமகுரவன் றிருவருள் செய்வாராக!

புராண சாரம்.

முன்னொரு காலத்தில், ஆன்மகோடிகளெல்லாம் மலவிருளிலமுந்தி வருத்தமுற்றன. சிருஷ்டித்திரட்சிப்பது எத்தகைமை யாகுமெனக் கைலையங்கிரீசனைக் கைகூப்பி நின்ற கருணை சொரூபக் கௌரியை யிருகூறுக்கி, ஓர் பாகத்தைச் சத்தியாயிடப் பாலிற் சேர்த்து, மற்

Koviloor Digital Library

ஹென்றை ஒருமுக மிருகை யுபயதிருவடி மதலை யாக்கி ஞானசத்தி பதித்து, குகன், விசாகன், ஞானசத்திதரன் என்ற நாமங் கொடுத்து, இச்சை, கிரியாசத்தி, படைக்கலங்களும், அஷ்ட வித்யேஸ்வரர் பக்கத் துணையும், ஒரு மயில் வாகனமும் அளித்துக் கைலையினிடப் பாகத்துக் கவினுறு தளியுண்டாக்கி, அதிலிருந்து ஐந் தொழிலாட்சியாற்றியமருதி யென்ன, அரனரு ளாக்ஞைப்படி முருகவேள் நடாத்தி வருநாளில், சாகத் தீவிற்கரசனுகிய சூரன் தம்பிகளாகிய தாரகன், பத்மன், சிங்கன் என்பவர்களுடன் அகத்தியர், திரணவிந்து வென்னும் ஆன்ரோர் உபதேசப்படி அநித்ய வாழ்வை வெறுத்து, ஆண்டவனூரும் மயில வாகனுதிய பேறு கருதிக் காஞ்சிமா நகரிற் கடுந்தவம் புரிந்து வந்தான். இவ்வாறு நிகழும்போது கைலையின் வடதளிக் கந்தனைத் தெரிசிக்க வழக்கம்போல்வரும் மாலய னுதியர் வாயில் மயிலினிடத்து வந்து, உன் பதங்கருதிச் சூரனுதியர் காஞ்சியிற் கடுந்தவஞ் செய்கின்றன ரென்னக் கழறச் சித்தங்கலங்கி, மயூரமானது திமையில் வழியீதெனத் தேர்ந்து செவ்வேள் பதத்தைத்தியானித்து ஒரு விமான மனுப்பிச் சூரனுதியரைக் கணுதிபராக்கிச் சாமீப பதவியிற் சேர்த்தது. அவ்வாறடைந்த சூரனுதி யர்பால், அண்டவாபரணனென்னுங் கணுதிபன், மாலயன் வாசகத்தால் மயிலே, நுங்கட்கிப்பதம் வழங்கியதென வழுத்த, உற்றதுணர்ந்த சூரன் உட்பகையெய்தி அற்றம் நோக்கி, அரியயன் குமரவேளாலயம் அடைந்த காலம், மயிலிடம் வந்து வணங்கி, அன்னமுங் கருடனுந் தமக் கெதிரில்லையெனத் தருக்கிப் பேசியதெனத் தந்திர வசனம் புகன்று சினமூட்ட, மயில் வாதித்து இரண்டு பக்ஷிகளையும் விழுங்கி விட்

Koviloor Digital Library

டது. மாலயன் றமது வாகனங்களைக் காணுது செவ்வேள் சந்நிதி சென்று முறையிட, நிகழ்ந்தமை யறிந்து, மயிலையழைத்து வாகனங்களைக் கக்கும்படி செய்து மாலயற் களித்து விடுத்து, மஞ்ஞையை நோக்கி, நீ, தீர விசாரியாது அகங்காரத்தால் நிரபராதிகளாகிய பக்ஷிகளை விழுங்கினமையால், பாவம் நீங்கக் கர்ம பூமியிற் கன்மலையாகத் தண்டனை விதிக்க, மனநடுங்கி வணங்கி நிற்கும் மயிலின்மீ திரக்கம் வைத்து, பாண்டி நன்னாட்டில் பதினுன்கு சிவக்ஷேத்திரத்திலொன்றாகிய திருப்புத்தூரின் கீழ்பால் அரச வனத்தில் மலைவடிவாக விருக்கக்கடவை. நாம் சண்முகக் கோலத்துடன் உன்னிடத்தில் வந்து சாரூப்பியபதந் தருதுமென்று சாற்றியருள, ஆண்டவன் பதத்தை அஞ்சலித்து. அவனியிற் புகுந்து, அநேக சிவாலயங்களைச் சேவித்து, திருப்புத்தூரிற் சிவனருள் பெற்று, அரசவனத்தின் நாப்பணமர் அமலனைத்தொழுது உத்தரதிசை நோக்கிக் கிரிவடிவாகி யுறைந்தது. இஃதிவ்வாறாக. கந்தகிரியில் உள்ள,

2. செவ்வேள், சூராதியரை நீங்கள் நமது மயிலுக் கிடையூருக வஞ்சகம் புகன்று சித்த மயங்கச் சினமூட்டினமையாற், கொலைபுரி யவுணர் குலத்திற் பிறந்து, உங்களெண்ணத்தைக் கெடுத்த தக்கன் யாகத்திற் சிவாபராதம் பிடித்த வானவர் குழாங்களை வருத்தி வருவீர்களாக! அக்காலம் நாம் ஆறுமுகத் திருவுருவாகத் தோன்றி, உமது தீவினைகளை யொழித்து மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்வோமென விடுத்தனர். அவ்வாறாகக் காசிப முனிவர்க்கும், மாயைக்கும் புதல்வராய்ப் பிறந்து, தவஞ்செய்து அவுணர் கோக்களாய் அரசாட்சியெய்தி, அமரர்

Koviloor Digital Library

கட் கலக்கஞ் செய்ய. அதனை யாற்றாத அரிய யனாதியர் முறையிடற் கிரங்கி உமாபரமேஸ்வரை ருற்ற ஆறு திருமுகத் தழல்விழிப் பொறியாய் அவதரித்து, சண்முகக் கோலங்கொண்டு தானைகள் சூழத் தாரணியடைந்து, வஞ்சகமாயாக் கிரவுஞ்ச வரையொடு தாரகா சூரனைத் தடிந்து, அவன் அபீஷ்டப்படி யானை வாகனமாய் அரியர புத்திரர்பாலடைவித்துச், சேனைகளுடனே செருச்செயவந்த சிங்கமுகனைச் செற்று, அவன் சிந்தையின்படியே தேவியினூர்தியாய்ச் சென்றிடப் பணித்து, வன்சமர்க்கெய்தும் மாயை வல்லபனாகிய சூரபத்மன் எடுத்துநின்ற மாவுருவினை யிருகூறாகும்படி சத்திவேலினாற் பிளந்து, தன்முன் வந்தடைந்த மயிலையுஞ் சேவலையும் வாகனந் துவசமாகக் கொண்டு, தேவர் சிறை மீட்டுத் திருச்செந்திலடைந்து, விண்ணவர் செய் பூஜைகொண்டு, திருப்பரங்குன்றிற் றெய்வ குஞ்சரியைத் திருமணமுடித்து விண்குடியேற்றிச் சிற்றூர் எயினர் குல ஸ்ரீ வல்லியைக் கைப்பற்றித் திருத்தணிகை சேர்ந்து கந்தகிரிபோய்த் தந்தை தாயர் களிப்புற விருக்கும்பொழுது, தான் முன்னஞ் சாற்றிய வண்ணம் மயூரசாப விமோசனங்கருதி, மாலயனாதி வானவர்சூழ மயிலூர்ந்து ஸ்ரீவல்லி கஜவல்லி சமேதராய், வான் வழியாக மயூரகிரியை யடைந்து, மலையை யிருகூறாக்கி, ஒன்று கிரிவடிவாகவும், மற்றொன்று மயில் வடிவாகவும் சாப விமோசனஞ் செய்து தன் பக்கத் திருத்தித் தடவிக் கொடுத்துத் தண்ணருள் புரிந்தனர்.

3. சாபம் நீங்கி அற்புதக் காட்சி கண்ட அணிசிறை மயூரம் ஆனந்தக் கூத்தாடிற்று. அந்த ஸ்தானந்தான் மயிலாடு பாறையென்று

Koviloor Digital Library

இன்றும் விளங்கிக்கொண்டிருக்கிறது. அப்பாறையில் உத்திரத் திருநாளிரவு ஆண்டவன் காட்சியருளுகிறார். பின் மயில் ஆறுமாமுகவனை வணங்கி, ஆண்டவனே இத் திருக்கோலமுடன் இக்கிரியின்கண் அனவரதசாநித்தியராய் அன்பர்கள் வேண்டும் இஷ்டசித்திகளீந்து அமர்ந்தருளல் வேண்டும். அன்றியும். தேவரீர் திருநாமத் தீர்த்தமொன்று தருதல்வேண்டும். அடிமையாமென்னை. நின்னடி நிழலிற் சேர்த்தல்வேண்டுமென்று பிரார்த்திக்க, கந்தநாதன் கருணைகூர்ந்து, அக்கிரியின் றென்பாற் றீர்த்தமுண்டாக்கி, இத் தீர்த்தத்தின் மூழ்கினோர் இகபரசித்தி யெளிதிற் பெறுவார்களென்றும், இத்தீர்த்தத்தின் நாமஞ் சரவணப் பொய்கையென்றும், இக்கிரியை மயூரகிரி யென்றும் நம்மை மயூரகிரிநாதனென்றும், உலகெலாம்பரவி, உய்யும் வண்ணம் வரமளித்து மயிலே நீ சரவணத் தீர்த்தத்தின் வடபாற் சுயம்பு லிங்கமொன்றுளது, அதன் மேற்பால் உன் பெயர் விளங்கத் தீர்த்தமமைத்து, அதில் மூழ்கி மயூரேசரென்னப் பூஜித்துப் பின் மாயவர க்ஷேத்திரமடைந்து, தீர்த்தமாடி மூர்த்தியைப் பூஜித்துவருகவென்று மயிலினிடங் கட்டளையிட்டு, வானவர்கணமொடு தாமும் அத்தீர்த்தத்தில் மூழ்கி, மயூரேசனை வழிபாடாற்றியமர்ந்திருந்தனர். மயிலானது சரவணத்தடமாடி, மூர்த்திசேவைசெய்து. அச்சிவலிங்கப்பெருமானுக்கு, மேற்பால் தன்பெயர் விளங்க வாவியமைத்து, மயூரேசனைப் பூஜித்து, மாயவரஞ் சென்று காவிரிநதியின் மூழ்கிச் சிவபூஜைசெய்து அந்நகரை மாயூரமென வழங்க வரம்பெற்றுப் பின் மயூரகிரிவந்து செவ்வேள் திருவடிவணங்கி, இனி அடிமை செய்பணி யாதென, ஆண்டவன் அனுமதிப்படி மயனைக்கொண்டு, பணி செய்து

Koviloor Digital Library

பரிவாரங்களுடன் ஸ்ரீ வல்லி கஜவல்லி ஸமேத ஷண்முகஸ்தாபன கும்பாபிஷேகம், மாசிமகத் திருவிழாச் செய்து கலப மயூரங் கந்தநாதன் கழலிணை சேர்ந்தது.

அக்கிரியை கிரேதாயுகத்தில் மயூரமாநகர மெனவும், திரேதாயுகத்தில் அரசவனமெனவும், துவாபரயுகத்தில் ஸ்ரீ கண்ணபிரான் மனைவியாகிய சாம்பவதிக்குப் புத்திரப்பேறு கருதி அறம் பல செய்தும், பேறடையாது உபமந்ய முனிவர் உபதேசப்படி மயூரகிரிவந்து முருகர்க்குரித்தாம் மூன்று விரதமுஞ் செய்து சந்தானமெய்தி, அக்கிரியிற்றிரு நகரங்கண்டு, கண்ணபுரமெனக் கழறச்செய்தனரென்றும், கலியுகத்தில் மயூரகிரி, குன்றைக்குடி, சிகண்டிவரை, துங்கமலை, கொங்கண சித்தர் சித்திச் க்ஷேத்திரம் ஆகிய பல நாமங்கள் பெற்று விளங்கும். அத்தலத்தின் பெருமையை அளந்து கூறுதல் யார்க்கும் அரியதாகும்.

முருகர்க்குரித்தாம் கார்த்திகை, சுக்ரவாரம் சஷ்டி மூன்றுவிரதத்தையும் மயூரகிரியடைந்து விதிப்படி யனுஷ்டித்து ஆண்டவனை வேண்டும் அன்பர் அடைவதற் கரும்பொருள் யாதிருக்கின்றன. இவ்விரதங்களை அனுஷ்டித்தோர் இந்திரன் விஷ்ணு, அர்ச்சுனன் இன்னும் அநேகர்.

அருந்தமிழ் முனிவராகிய அகஸ்தியர்க்கு உண்டாகிய ஐயந்திர அமலனைத் தியானித்தார். ஆண்டவன் சோமாஸ்கந்த ரூபராய்த் தோன்றி வேண்டியதென்னென, ஐயனே அருணைவெற்பாதி யளவிறந்தமலைகளினும் ஆறுபடை வீட்டினும் மயூரகிரியே விசேடமென்பதென்னை, அதிற் கந்தநாத னெக்காலு முறைந்து எளிதினிலடியார்க் கின்னருள் செய்வதென்னை, ஐயந்திர

Koviloor Digital Library

அனுக்கிரகிக்க வேண்டுமென அஞ்சலிப்ப, முனிவே! நமது குமரன், வாகனமாகிய மயில் செய்த அபசாரத்தால் மலைவடிவாகச் சாபமிட்டான். உய்யுமாறு வேண்டும் மயிலை நோக்கி அஞ்சற்க, நாம் ஷண்முகத்துடன் வந்து சாப விமோசனஞ்செய்வோமென்றவாறே, சூரசங்கார முடித்துதோகைவெற்படைந்து மயிலினபீஷ்டப் படி எக்காலமும் மகிழ்ந்து வீற்றிருந்து வருகிறான். அன்றியும் அம்மயில் நம்மால் அளித்த தாதலால் மேம்பாடுடையது. அம்மயிலே உலக முய்ய மலைவடிவாயுறைதலால் மலையும் விசேடமாகும். பழைய நட்பினுல் நமது சேயும் அம்மலையில் அனவரத வாசமாகி அடியவர்க்கெளிதின் அருள்செய்து வருகின்றான். ஆறுபடை வீட்டினுஞ் சிறந்தது மயூரகிரி யென்பது எதனுலெனின் தமது சொந்தவூர்க்குச் செல்லுமொருவனுக்கு யிடையிற்றங்கிச் செல்லும் ஊர்களெல்லாம் சொந்தவூராமோ. அன்றியுங் கிரிகளில் மயூரகிரி, விரதங்களிற் கார்த்திகை, கந்தங்களிற் பசைக்கற்பூரம், நிவேதனங்களில் வெண்பொங்கல், பக்ஷணங்களில் வடை, வஸ்திரங்களில் வெண்கலை, மலர்களில் தாமரை, தெய்வங்களிற் செவ்வேள் உயர்வென்றறிவாய். மலரயன் வானவரோடு மயூரகிரிவந்து திருக்கார்த்திகை நாளில் மேற்குறித்த விஷேட வஸ்துக்களால் அபிஷேக வாராதனஞ் செய்து அவுணர் அச்சந்தீர்த்து சுபகரவாழ்வுற்றான். பூமியிலுள்ளோர் பூஜித்து இகபரபோக இன்பம்பெற்றோர் எண்ணிலர், என்றியம்பி யீஸ்வரன் கயிலையெய்தினர். பின் அரனருள்பெற்ற குறுமுனிவர் மயில் வரையடைந்து சரவணத்தடத்தில் மூழ்கி ஸ்ரீஷண்முக தெரிசனஞ் செய்து, கிருபைபெற்று, அக்கிரிக்கு இரண்டு கடிகை வடதிசையிற்

Koviloor Digital Library

சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து பூஜித்தனர். அத்தலம், நேமத்தின் வடபால் ஆற்காடு என்னும் பெயரோடு விளங்குகிறது. அவரபிஷேகித்த தேனனது பிரவாகித்து நதியாகி வளம்பெருக்கி இன்றும் விளங்கிக்கொண்டிருக்கிறது.

இன்னும் மயூரகிரியிற் குமரவேளைப்பூஜித்து பேறுபெற்றவர்கள் அளப்பிலர்:

1. (வசிட்டர் பூஜித்து) கௌசிகராற் றம் புதல்வர்கட்கு நேர்ந்த சாபம் நீங்கி அருள் பெற்றார்.

2. (விஸ்வாமித்திரர் பூஜித்து) வசிட்டர் புதல்வர்களைச் சாபமிட்டதன் வினைதீர்ந்து தவ சிரேஷ்டரானார்.

3. (பிர்மதேவர் பூஜித்து) அருணாசலேசர் முடிகண்டேனென்று பொய் சொன்னமையாற் பூசையில்லாக்குறை தீர்ந்து உலகில் நித்ய நைமித்ய காமிய கர்மங்களிலும் பிராமணருருவினும் தன்னைப்பூஜிக்கும் பேறுபெற்றான்.

4. (கருடன் பூஜித்து) தமதன்னை விநதையென்பாள் கத்துருவின்பாற் செய்யும் அடிமை நீங்க அமிர்தங்கொண்டுவரும் ஆற்றல்பெற்றான்.

5 இந்திரன்பூஜித்து விருத்திராசுரனைச்செயிக்கும் மொய்ம்பு பெற்றுய்ந்தான்.

6. (சூரியன் பூஜித்து) தன்னைப்பிரிந்த உஷாவென்னும் மனைவியைக் காணவும், உடனுறைந்து வாழவுங் கிருபைபெற்றான்.

7. (மன்மதன் பூஜித்து) திரிலோகங்களிலுந் தன்றிறமை செல்லுஞ் சிறப்புப்பெற்றான்.

8. (பாண்டவர்கள் பூஜித்து) தீர்த்தமுண்டாக்கி துரியோதனாதிகளைச் செயித்து அரசுரிமையைக் கைக்கொண்டார்கள்.

Koviloor Digital Library

9. (நாரதர் பூஜித்து) குகன்பாற்குறையாத வன்பும் ஆற்றலும் எவற்றினும் பற்றற்ற பேரின்பசித்தியும் பெற்றார்.

சூதபுராணிகர்பால் இச் சரித்திரங் கேட்ட நைமிசாரண்ய முனிவர்கள் மயூரகிரிக் கந்தனைத் தியானித்து வாழ்த்தி வணங்கினார்கள்.

இடும்பன் வரலாறு.

இடும்பன் அவுணர் குலத்திற் பிறந்தவன். அறிஞன். சூரனாதியருக்கு வில்லாசிரியன். சூரனாதியர் குமரவேள் போரினில் முடிந்திட அஞ்சி மனைவியோடு தவவுருக்கொண்டு தாரணியிற் றலயாத்திரையிற் றமிழ்முனிவரைக்கண்டு அவரேவலின்படி சத்திகிரி சிவகிரியைத் தன் றோளிற் காவடியாகச் சுமந்து மலயஞ்சென்றான். வடிவேலிறைவன் வழிமயக்கிப் பசிதாபமுண்டாக்கி வலிகுறையும்படிசெய்ய வராககிரியிலுள்ள திருவாவினன்குடிப்பக்கத்திற் காவடியை இறக்கிவைத்து உணவயின்று கிரிச்சுமை எடுப்பக்கிட்டினன். எவ்வித உபாயத்தாலும் கிரிகள் மேலெழாதிருப்ப அம்மலைச்சிகரியில் பாலவடிவாய்த் தண்டாயுதபாணி விளையாடுதலைக்கண்டு அச்சேயுடன் வாதாடிப்பாய்ந்தான். குழந்தைவேலன் உம்மெனும் உரப்பினாற் சாய்ந்தான். இடும்பி மங்கிலியப்பிட்சைகேட்க, உயிரளித்து அவன் மனோபீஷ்டப்படி தாம்வாழ் எத்தலங்களினும், சந்நிதிக்காவலும் ஏவலும் பாலித்தார். மயூரகிரியினுஞ் சத்தி சிவகிரிக்காவடி சுமந்த திருக்கோலத்துடன் ஸ்ரீ ஷண்முகப் பெருமான் முன், காவலும் ஏவலும் செய்து வழிபடும் அடியார்கள் இடையூறு தீர்த்துப் பிரார்த்தனைப் பூஜை, சிதறு தேங்காய்கள் ஏற்றுக் குமரவேள் திருவருள் கைகூட்டி அருள்புரிந்து வருகின்றார்.

Koviloor Digital Library

உ

சிவமயம்

ஸ்ரீ பரமகுருவே நம:

குன்றைக்குடி வெண்பா மாலை.

ஸ்ரீ தோகையடி விநாயகர்.

சந்தமயூ ராசலத்தெஞ் சண்முகவே ளின்பதத்திற்
செந்தமிழ்வெண் பாமாலை செப்புதிறந் — தந்தருளி
ஓகையொடு மென்ற னுளத்துணர்வாய் நின்றிலகுந்
தோகையடி யானை துணை.

அவையடக்கம்.

சத்தமுஞ்சத் தார்த்தமுஞ்சிற் சத்திசிவ மென்றதனற்
பித்தனுரை யென்றிகழார் பெட்புறுவர்—முத்தமிழோர்
வேண்டுமடி யார்வெவ் வினைதீர்க்கு மஞ்ஞைவரை
யாண்டவன்வெண் பாமாலை யை

வெண்பாமாலை.

வானவர்கள் வாழ்த்துகுன்றை மாநகர்க்கண் வள்ளி தெய்வ
யானையுடன் மாமயிலூர்ந் தஷ்டசித்தி – தானியற்றி
யங்கை யயில்கொண் டரசியற்றுஞ் சண்முகன்றாள்
செங்கைகுவித் துய்வாந் தினம் (1)

Koviloor Digital Library

சித்திபல செய்துகுன்றை க்ஷேத்திரத்தின் மேவுசிவ
சத்தியருள் பாலகா சண்முகவா — பத்தியுடன்
சந்ததமு நின்பொற் சரணர விந்தமதைச்
சிந்தைமற வாதிருக்கச் செய் (2)

வஞ்சப் புலப்பகைஞர் வாதனையிற் சிக்கியுழல்
நெஞ்சத்த னுய்யு நெறிகாட்டி — யஞ்சலெனக்
கூறியருள் குன்றைக் குடியாய் குருவாய்வந்
தாறெழுத்தி னுண்மை யதை (3)

இருவினையிற் கட்டுண் டெழுவகைத் தோற்றத்துக்
கருவினையிற் புக்குக் கறங்கிற் — றெருமருமென்
னல்லற் பவவினைதீர்த் தாள்குன்றை மேவுமெலாம்
வல்லசிவ சண்முகதே வா (4)

மும்மலத்தால் ஞானவிழி மூடியின்ப வீடுபுகுஞ்
செம்மைநெறி தேருத சிவநுய்யு — மெய்ம்மையுப
தேசித் தருளுஞ் செகத்குரவன் மஞ்ஞைவரை
வாசத்தா னென்னு மறை (5)

சத்திமான் மெய்ஞ்ஞான சத்திதரன் சத்திதரு
புத்திரனென் றுன்னைப் புகழ்ந்திரண்டு—கைத்தலமுஞ்
சென்னிமிசைக் கூப்பிச் சிகண்டிவரை நின்றனருட்
சன்னிதிமே வச்செய் தயை (6)

பாவாற் புகழ்ந்திறைஞ்சிப் பத்திசெயுஞ் சித்தமெனக்
கீவாய்குன் றைக்குருகு கேசாமா — தேவா
சயவிஜய வேலாசிற் சத்திபுதல் வாசி
வயவோஞ் சரவணப வா (7)

தாரகத்தைத் தந்தைசெவி சாற்றுகுகன் சந்தவரைச்
சீரகத்தி யன்பரவு சேய்குன்றை—யூரகத்த
னிஷ்டசித்தி யாவுமகிழ்ந் தீபவனென் றேத்துமினங்
கஷ்டமெலாந் தீர்த்தருள்வன் காண் (8)

Koviloor Digital Library

வேதனரி வேளிரவி விண்ணவர்கோ மான்கருடன்
மாதவன்விஸ் வாமித்ரன் வாசிட்டன் — நீதிநெறிப்
பாண்டவர்கள் நாரதனு பாசித்த மஞ்ஞைவரை
யாண்டவனே தஞ்சமென்னை யாள் (9)

வருசாபந் தீர்ந்துமயில் வாவிதொட்டுக் கோலத்
திருவுருவங் கண்டுவிழாச் செய்யப் — பொருவில்கதி
யீந்தருளிக் குன்றையுறை யெல்லாஞ்செய் சிந்தனமக்
காந்துணைமற் றின்றொருவ ரார் (10)

புலவரெலாம் பூக்கொண்டு போற்றிப் புகழக்
கலபமயூ ராசலத்தின் கண்ணே — யிலகியருள்
செங்கைவடி வேல்புனைந்த தேவசே னாதிபநின்
றுங்கமலர்ப் பொற்றாள் துணை (11)

பூசனைசெய் மூவரெனப் பூவுலகோர் போற்றுகுஞ்ச
ராசனப்பூங் காவினென்று நண்ணுகுன்றைத்—தேசிகசி
காமணியே சத்தியிரு கண்மணியே சித்திதரும்
மாமணியே வாகிருபை வை (12)

அச்சுவத்தக் கானமயூ ராசலக்குன் றாக்குடியில்
இச்சைவைத்தெக் காலுமன்ப ரீடேறும்—விச்சைபல
செய்யுங்கண் கண்டவருட் டெய்வதநீ தீவினையே
னுய்யும்வகை யீதென் றுரை (13)

வித்தகவே லேந்தியன்பர் வேண்டுவரம் நல்குமஞ்ஞை
அத்திரியின் மேவுமுமை யாள்சுதனே — நித்தம்
மனமொழிமெய் மூன்றுமொத்துன் வாரிசத்தா ளைப்பூ
சனைபுரியும் வாழ்வெனக்குத் தா (14)

வண்ணமல ரிட்டிறைஞ்ச மந்திரச்சடாக்ஷரத்தை
யெண்ணவிடா தைவர்களு மென்னுளத்திற்
—பண்ணுதுயர்க்
காற்றுகிலேன் போற்றியெனை யாள்வாய் மயில்வரை
கூற்றுதைத்தோ னின்ற குகா [வாழ் (15)

Koviloor Digital Library

காலன்விடும் பாசக் கயிற்றூற் பிணித்திடவென்
பாலனுகு மேல்வையினிற் பச்சைமயில் — மேலி
வந்தாதரித்தென் மரணபயந் தீர்குன்றைக் [வர்ந்து
கந்தாகு காசண்மு கா (16)

பகைசெயுங்கா மாதிவஞ்சர் பாசத்தா லார்த்துச்
சகமாயை யாந்தண்டாற் ருக்க — வகநடுக்கங்
கொள்ளுமெனை யஞ்சலெனக் குன்ருக் குடிவாழும்
வள்ளிகண வாவிரைந்து வா (17)

காமதக னஞ்செய்தழற் கண்ணுதர்க்கட் டோன்று
[சத்தி
மாமகனீ குன்றையிறை வாசிறிதும் — நேமநெறி
நில்லாத வன்பொல்லா நீசனென்று நீக்கிவிடற்
கொல்லாது வேலா யுதா (18)

விதிமுறைநன் ஞேன்புதவ மேவுமன்பர்க் கன்றிக்
கதியரிய தாமென்னக் காட்டிச்-சதுர்மறைநூல்
சொற்றிடக் கேட் டும்மறந்தேன் ருேகைவரை
[ஞானசித்தி
வெற்றிவே லாவென்செய் வேன். (19)

மித்தையென விச்சகத்தின் மெய்மைகண்டு
[சீவரெல்லாம்
அத்துவித வீட்டின் படைந்துய்யத்-தத்தொமசி
மாவாக் கியமுணர்த்தி வாழ்வருளும் வள்ளல்
[குன்றைத்
வேதா திபதியுமை சேய். (20)

மன்னு நிராசை மனைவி தவஞ்சாந்தம்
யென்னுமைந்தர் சுத்தமன மேவல்குணஞ்-சொன்னம்
வருசகல கேவலமில் வாசநிறை வாழ்க்கை
தருமிறைவன் குன்றைத் தலன். (21)

Koviloor Digital Library

அஞ்சக் கரத்திறையும் அம்பிகையும் பாலனென்று
கொஞ்சிக்கு லாவுங் குணக்குகன்ரு-ளஞ்சலிமின்
அஞ்ஞான பந்தமறுத் தாதரிப்பான் மஞ்ஞைவரை
மெய்ஞ்ஞான பண்டிதச்செவ் வேள். (22)

பதினுறு பேற்றையுமன் பர்க்குதவி செய்யும்
அதிகாரன் குன்றைக் கரசன்—விதியைச்
சிறையிலிட்டுச் சிஷ்டியைச்செய் தேவ னவனங்
குறைமுடித்தாட் கொண்டருளுங் கோ (23)

பாசபந்த நீக்கிப் பசுக்களுய்ய ஞானவுப
தேசநவின் மஞ்ஞைவரைச் செல்வமுரு—கேசநின்னைச்
சரணு கதியென்று சார்ந்தேன் ஜனன
மரணுதி துன்பொழித்தாள் வாய் (24)

சென்மவித்தா மாசை சினமகற்றிச் சுத்திசெய்த
நன்மனப்பீ டத்தமர்மெய்ஞ் ஞானகுகா—நின்மலர்த்
பத்தியினை நல்கிப் பழவினைதீர்த் தாள்குன்றைச்[தாட்
சத்திவடி வேலாயு தா (25)

சீறியெழு மைந்திந் திரியவர வங்கடனைக்
கோறமதி வாள்கைக் கொடுத்தருள்வாய்—பாறுசூழல்
வேலாயு தாகுன்றை வித்தகா கைத்தலத்திற்
சூலாயு தத்தன் சுதா (26)

அஞ்சடக்கி வாயு வசையா துணர்வி னருட்
செஞ்சுடரை நோக்கிநிஷ்டை செய்யுமன்பர்—
நெஞ்சகப்பொற்
கோவிலுறை குன்ருக் குடியனையல் லாற்பிறரைச்
சேவியேன் யான்சத் தியம் (27)

அன்னைபிதா சற்குரவன் ஆண்டவன்குன் ருக்குடிவா
முன்னையன்றி யில்லை யுறுதியதாய்ச்—சொன்னேன்
பரமகுர வாஞான பண்டிதா வின்னும்
வரமளிக்க யேன்ரு மதம் (28)

Koviloor Digital Library

ஐயவிரு ளெல்லா மகல்தத் துவவிளக்கென்
கையுதவி வீட்டின்வழி காட்டியருள்—செய்யகுன்றைச்
சேத்திரத்தின் மேவியெண்ணில் சித்திவிளை யாடுதிரி
நேத்திரத்தா வின்றசுதா நீ (29)

பத்தர்புகழ் குன்றைப் பரமகுரு தேசிகனே
சித்தபத்மமேவித் திருவருள் செய்—தத்துவித
உண்மை யுணர்த்தி உபய திருவடிக்கீழ்
வண்மைபெற வைத்தருளு வான் (30)

வாழ்த்து

வள்ளிதெய்வ குஞ்சரியாள் மஞ்ஞுவரை ஷண்முகவேள்
அள்ளிலைவேல் வீரர் அடலிடும்பன் — புள்ளிமயில்
தெய்வவெண்ணீ றுடெழுத்துச் சீருருத்தி ராக்கமணி
சைவநெறி வாழ்கத் தழைத்து.

அறப்பயன்.

வரவிகூ பங்காரப் பசுமடம்பவளி மண்டபம் நந்தனவளங்கள்
சேவையோர்க் குறையுள் அன்னபானதி சிவதருமம்பல வுள்ளத்
தரவலாய்க் குன்றக் குடிக்குமரேச னருள்பெறச்செய்யு மெய்
[யன்பர்
பூவுலகேத்த வாழ்ந்துசண் முகவேள் பொற்பதம் புகுவர்சத்தி
[யமே

முற்றும்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

சிவமயம்.

வேலும் மயிலுந் துணை.

மயூரகிரி
பஞ்ச ரெத்தினக் குறள் வெண்பா.



பஞ்சரெத்தி னக்குறள்வெண் பாப்புகலத் தோகையடிக்
குஞ்சரங்காப் பாகுமென்றைக் கும்.

குருஸ்துதி.

திருவே ரகம்பழநி தென்பரங்குன் றங்காப்
பருவதஞ்செந் தூர்பற் பலகுன் — றொருவரத
கத்தன் கலபவரைக் கந்தன் பரமகுரு
சித்தனென நெஞ்சே தெளி.

ஸ்ரீ சண்முகநாதர்.

ஆறுமுகா குன்றை யரசே யடியேனைச்
சிறும்வினை நீக்கியருள் செய்
மயூரகிரிச் செவ்வேள் மலரடியைப் போற்றி
செயுமி னுண்டு மேலாந் திரு
தருமார்த்த காமமுத்தி தந்தருண் மெய்ஞ்ஞான
குருபரன் குன்றைக் குகன்.

கலியுகத்திற் கண்கண்ட கர்த்தன் சிகண்டி
மலைவாழ் வடிவேல வன்
விண்முதல்வர் போற்றுமஞ்ஞை வெற்பினென்று
சண்முகவா நீசெய் தயை [மேவுசிவ
வாழிதெய்வ குஞ்சரிஸ்ரீ வல்லிசிவ சண்முகவேள்
வாழி சிகண்டி வரை.

முற்றும்.

Koviloor Digital Library





Koviloor Digital Library

41
Koviloor Digital Library

பதிப்பிக்கப்பட்ட நூல்கள் 9

இந்நூலாசிரியர் இயற்றிப் பதிப்பிக்க வேண்டியவை

1 விலானூர் ஸ்ரீ பரம்பனியம்பிகை வெண்பா மாலை
2 கந்தவேளுற்சவக் கட்டிய வசனம்
3 குன்றைக்குடி ஆசிரியப் பாமாலை
4 ஸ்ரீ பரமேஸ்வரி பல்வண்ணச் சந்தக்கும்மி
5 தேவி பிரபாவம், 24 அதிகாரம் கண்ணி வடிவாயுள்ளது
6 அனுஷ்டான முறை வசனம்
7 மூர்த்தி மந்திர ஆசிரிய விருத்தம்
8 அப்பர் அருண்மொழி வசனம்
9 யோக சாதனுனுபவ வசனம்
10 தனிப்பாடல்கள் கீர்த்தனுதிகள்
11 ஸ்ரீ பரிமணங்குடி பரம்பரைக் குருமணிகள் சரித்திரத்திரயம்
12 ஸ்ரீ சஷ்டிச்சுவாமிகள் யாத்திரை க்ஷேத்திரந்தோத்திர மஞ்சரி
13 ஷை ஸ்வாமிகள் ஜெனனமுதல் நாளதுவரை நிகழ்ந்தவை நவிற்றும் ஜீவிய சரித்திரம் கண்ணிகள் 700 வரை

பரிமணங்குடி ஸ்ரீ ஷண்முககாத ஸ்வாமி கோவில் சைவ சன்மார்க்க சங்கம் ஸரஸ்வதி மாலிஇ.ம், ஆவுடையார் கோவில் ஸரஸ்வதி மாலிலும், பிரதிகள் கிடைக்கும்.

நாவலர் பிரஸ், காரைக்குடி.